MC.No.24/2023

DATED:- 09.12.2024

PW1:- அக்ஷயா,க/பெ. மணிகண்டன், வயது.26

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

1. எனக்கு திருமணம் ஆகும்பொழுது 16 என்றால் சரிதான். எனக்கு விருப்பம் இல்லாமல் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கு படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது, என் அம்மா மற்றும் அப்பாவின் கட்டாயத்தால் தான் நான் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன். விருப்பமில்லாமல் எனக்கு திருமணம் நடைபெற்றது என்பதாலும் எதிர்மனுதாரர் வயதில் மூத்தவர் என்பதாலும் வயது வித்தியாசம் இருந்ததாலும் எங்களுக்குள் தாம்பத்திய உறவு தடைபட்டதா என்றால் கட்டாயத்தின் பேரில் தாம்பத்திய உறவு ஏற்பட்டது. விருப்பம் ஏற்படாமல் திருமணம் செய்து கொண்டேன் என்று கூறியுள்ளேன் ஏன் ஆரம்ப காலகட்டத்திலேயே திருமண முறிவு ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கவில்லை என்றால் என் தாய் மற்றும் தந்தையின் ஆலோசனையின் பேரிலும் எதிர்மனுதாரர் என்னை படிக்க வைப்பார் என்ற எண்ணத்திலும் நான் அவ்வாறு செய்யவில்லை.

2. கடந்த பத்து ஒன்னு 2021 அன்று, எதிர் மனுதாரரின் பிறந்த நாள் நிகழ்ச்சி என்று நான் பங்கேற்காததால் பிரச்சனை ஏற்பட்டு, அன்றைய தினத்திலிருந்து நாங்கள் இருவரும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரிதான். அப்படி ஒரு பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பதை பற்றி எதிர்மனுதாரரும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் யாரும் என்னிடம் கூறவில்லை. என்னை தனியாக வீட்டில் விட்டு விட்டு சென்று விட்டார்கள். அதைப்பற்றி அவரிடம் கேட்ட பொழுது சண்டை ஏற்பட்டது. அதனால் நான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

3. எனக்கு வேறு ஒரு ஆணுடன் தொடர்பு ஏற்பட்டதால் தான் எதிர்மனுதாரரை நான் பிரிந்து சென்றேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் இருந்து நானும் எதிர் மனுதாரரும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் 03.10.2021 ஆகும். அன்றைய தினம், யார் என்னை எதிர் மனுதாரரின் வீட்டிலிருந்து அழைத்துச் சென்றார்கள் அல்லது எதிர்மனுதாரர் என்னை அவருடைய வீட்டில் இருந்து அழைத்துச் சென்றார்? என்றால் கடந்த 01.10.2021 அன்று முதல் பிரச்சனை ஏற்பட்டது. 03.10.2021 அன்று பிரச்சனை பெரிதாகவே, எதிர்மனுதாரர், என்னுடைய பெற்றோர்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வீட்டிற்கு வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று கூறியுள்ளார். என்னுடைய பெற்றோரும், எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்தார்கள். அங்கு என்னுடைய பெற்றோர் என்னிடம் நடந்த சம்பவத்தை பற்றி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்கு எதிர்மனுதாரர், உங்களை உங்கள் மகளை அழைத்துச் செல்லுங்கள் என்று தானே நான் கூறினேன், இங்கு அமர்ந்து என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். என்னுடைய தந்தையை எதிர் மனுதாரர் அடித்தார். நான் அணிந்திருந்த நைட்டி உடையை அவர் கிழித்து விட்டார். உடை மாற்றுவதற்கு கூட விடவில்லை. அங்கிருந்து என்னுடைய பெற்றோர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள்.

4. எதிர்மனுதாரர், ரயில்வே துறையில் வேலை பார்ப்பதாக நான் குறிப்பிட்டுள்ளேன், அதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. ஆனால் அவர் ரயில்வே துறையில் தான் வேலை பார்த்து வருகிறார். எதிரி எங்கள் பிரச்சனை சம்பந்தமாக, வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றும் நான் அதற்கு 10.07.2023 அன்று பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில், எதிர்மனுதாரரை ரயில்வே துறையினர், 2016 ஆம் ஆண்டிலிருந்து 2022

வரை பணியிட நீக்கம் செய்திருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5. எதிர்மனுதாரர் ரயில்வே துறையில் வேலை பார்த்த பொழுது தான் வாங்கிய கடன் பற்றி தெரியுமா என்றால் அந்த காலகட்டத்தில் அவர் கடன் எதுவும் பெறவில்லை. அவ்வாறு எதிர்மனுதாரர் தன் பெற்ற கடனை திரும்ப செலுத்தாத காரணத்தால் தான் அவர் மீது ரயில்வே துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் சத்யபிரமாண வாக்குமூலத்தில் எனக்கு PCOD உன்னை பிரச்சனை இருந்தது என்று போட்டுள்ளேன். அதற்கு, மருத்துவ சிகிச்சை எடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன். அது சம்பந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6. எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு நானும் என்னுடைய குடும்ப உறுப்பினர்களும் ஏதேனும் முயற்சி எடுத்தோமா என்றால் மொத்தம் இரண்டு முறை, இதைப் பற்றி பேசுவதற்கு அவர்களின் வீட்டிற்கு சென்றோம். ஆனால் எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீட்டிலிருந்து தெருமுனை வரை எங்களை ஆபாசமாக பேசி விரட்டிக் கொண்டு வந்தார்கள். எதிர்மனுதாரரும் அவருடைய அண்ணனும், என்னுடைய தந்தையை குத்தி விடுவேன் என்று மிரட்டிக்கொண்டே வந்தார்கள். நான் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும் எங்கள் தரப்பில் இருந்து சமரசம் பேசுவதற்கு எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களை நாங்கள் அணுகவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)